# 2030 ஆம் ஆண்டிற்குள் வீட்டு மனையற்ற - தகுதியுள்ள ஒவ்வொரு ஆதி திராவிட, பழங்குடியினக் குடும்பத்திற்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்!

## தி.மு.க. தேர்தல் அறிக்கை... 10- ஆம் பக்கத் தொடர்ச்சி!

புயல்கால நிவாரணங்கள், 49 மீனவர் கிராமங்களில் செயற்கை மீன் வளர்ப்பகங்கள், மீனவ மகளிருக்கு மானியங்கள், மீனவமாணவமாணவியருக்கு குடிமைப்பணித் தேர்வு எழுதப் பயிற்சி ஆகியவை செய்து தரப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

**மீன்பிடிதடைக்காலசிறப்புநிவாரணத்தொகை ரூ.8,000-இல்இருந்துரூ.12,000-ஆகஉயர்த்திவழங்கப்படும்.**

**மீன்பிடிகுறைவுகாலசிறப்புநிவாரணத்தொகை 6000 ரூபாயிலிருந்து 9000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

மீன்பிடித்துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்கள் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தி மீனவர்கள்தங்களின்வருவாயைபெருக்குவதற்குத் தேவையானநவீனஉட்கட்டமைப்புவசதிகள்அங்கு ஏற்படுத்தித் தரப்படும்.

கடற்பாசிவளர்ப்பைமீனவப்பெண்களிடையே ஊக்கப்படுத்தி அவர்களைத் தொழில் முனைவோராகமாற்றநடவடிக்கைஎடுக்கப்படும்.இதன்மூலம் அவர்கள் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கான வழி வகைஏற்படுவதுடன்கடற்பாசிஉற்பத்தியும்30,000 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும்.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மண்டலங்கள் (Aqua Zones) உருவாக்கப்பட்டு அதன் மூலம் மீன் உற்பத்தி அதிகரிக்கப்படும்.

கடல் கூண்டு மீன் வளர்ப்பை ஊக்குவித்து, உற்பத்தியை 200 டன்னிலிருந்து 400 டன்னாக உயர்த்துவோம்.

100 கோடி மீன் குஞ்சு உற்பத்தி செய்வதற்குத் தேவையான புதிய மீன் பண்ணைகள் அமைக்கப்படும்.

மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய மீன் விற்பனைஅங்காடிகள்முக்கியநகரங்களில்அமைக்கப்படும்.

மீன் மற்றும் இறால் வளர்ப்புக் கொள்கை உருவாக்கப்பட்டு அதனடிப்படையில், மீன் மற்றும் இறால் வளர்ப்பு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் உள்நாட்டு மீன் உற்பத்தி, தற்போது உள்ள நிலையில் இருந்து அடுத்த 5 ஆண்டுகளில் இரட்டிப்பாக்கப்படும்.

மீன்சில்லறைவிற்பனை, கருவாடுசில்லறைவிற்பனை, கடற்பாசி வளர்ப்பது போன்றசிறு தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற பெயரில் தமிழ்நாட்டின் எதிர்ப்பையும் மீறி கச்சத்தீவு இலங்கைக்கு அளிக்கப்பட்டதின் விளைவாகத் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவது, அவர்களதுபடகுகள்பறிமுதல்செய்யப்படுவதும்எனநமது மீனவர்கள் சொல்லொணாத் துயரத்தைச் சந்தித்து வருகிறார்கள். அவர்களுக்கு மாற்று வாழ்வாதாரங்களை உருவாக்கும் அதேவேளையில், இந்தச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண இந்திய - இலங்கை ஒப்பந்தம்மீளாய்வுச்செய்யப்பட்டு,கச்சத்தீவைமீட்கத் தொடர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்.

### 41 .ஊரக வளர்ச்சி மற்றும் தீவிர வறுமையை ஒழித்தல்

தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அதிக எண்ணிக்கையில் வழங்கிய குடும்ப அட்டைகளும், அவர் உருவாக்கிய நியாய விலைக் கடைகளும் தமிழ்நாட்டின் வறுமையை - ஏழ்மையை ஒழிக்கும் பெரும் முன்னெடுப்பாக அமைந்தது. இதைத் தொடர்ந்து திராவிட மாடல் அரசு உருவாக்கிக் கொடுத்த பல்வேறு திட்டங்கள் அனைத்தும்,தமிழ் மக்களின்சமூகப்பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி வருகிறது. நகர்ப்புற வசதிகளைக்கிராமப்புறங்களிலும் விரிவாக்கம் செய்து வருகிறது திராவிட மாடல் அரசு.

கலைஞர்மகளிர்உரிமைத்திட்டம், விடியல்பயணம்,மாணவர்களுக்கானகாலைஉணவுத்திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான கடன்கள் ஆகியவைஇதில்முக்கியமானவை. இந்தியஅளவில்வறுமைக்குறைவானமாநிலங்களில்கேரளம்முதலிடத்தையும், பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாயுமானவர் திட்டத்தின் மிக முக்கியப் பகுதியாக, நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் மிகவும்வறுமையில்வாடும்நலிவடைந்தகுடும்பங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வீட்டு வசதி, சமூகப்பாதுகாப்பு,வாழ்வாதாரம்,திறன்மேம்பாடு, வங்கிக்கடன் உள்ளிட்ட பல்வேறு உதவிகளைத் தேவையின் அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கைஎடுக்கப்படும்.இதன்மூலம்தமிழ்நாட்டில் தீவிர வறுமையில் (Ultra Poor) எவரும் இல்லை என்ற நிலையை அடைவோம்.

**கிராமப்புறங்களில் நகர்ப்புற வசதிகளை வழங்குதல் எனும் கருத்தாக்கத்தின் அடிப்படையில் கிராமங்கள் வளர்த்தெடுக்கப்படும். கிராமச் சந்தைகள், விளையாட்டு மற்றும்நலவாழ்வுக்கட்டமைப்புகள் உருவாக்கப்படும்.கிராமப்புறநீர்நிலைகளைச்செம்மைப்படுத்தி காத்தல், கிராமங்களைப் பசுமையாக்குதல், வேளாண் சாராத கிராமப்புற வேலைவாய்ப்பினை வழங்குதல், குறைந்த அரசு செலவில் அதிக பயன்பெறுதல் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய நோக்கங்களை அடைய உத்தமர் காந்தி மாதிரி கிராமங்கள் திட்டம் செயல்படுத்தப்படும்.**

முதலமைச்சர்கிராமசாலைத்திட்டத்தின்கீழ்15 ஆயிரம் கி.மீ நீளமுள்ள சாலைகள் ரூபாய் 10,000 கோடி மதிப்பீட்டில் சீர்செய்யப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் 30,000 கி.மீ நீளமுள்ள கிராமப்புறச் சாலைகள், நீண்டகாலம் நிலைத்திருக்கும் வகையில் மேம்படுத்தப்படும். "ஊரகச்சாலைகள் பராமரிப்பு நிதியம்" தொடங்கி, அதன்மூலம் அனைத்துக் காலநிலைகளுக்கும் ஏற்ற வகையில்தரமானமுறையில்கிராமப்புறச்சாலைகள் பராமரிக்கப்படும். விரைவான கிராமப்புற வளர்ச்சிக்கு இத்தகைய கட்டமைப்பு மேம்பாடு முக்கியப் பங்காற்றும்.

30ஆண்டுகளுக்குமேற்பட்டபழையமேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குப் பதிலாக 3 ஆயிரம் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ரூ. 1000 கோடி மதிப்பீட்டில் அடுத்த 5 ஆண்டுகளில் கட்டப்படும்.

மக்கள்தொகை அதிகமுள்ள 1000 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்குக் கிராமச் செயலகம் கட்டப்படும்.கிராமநிர்வாகஅலுவலகம், ஊராட்சி அலுவலகம், கூட்ட அறை, பொதுவிநியோகக்கடை போன்ற அலுவலகங்கள் ஒரே இடத்தில் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில்சுமார்ஊராட்சிஒன்றியம்மற்றும் ஊராட்சிகளால் கட்டப்பட்ட ஒரு லட்சத்து எண்




பதாயிரம் பொதுப் பயன்பாட்டுக்கான கட்டடங்கள் உள்ளன. இவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கெனவிரிவான ஊரகக்கட்டடங்கள்பராமரிப்புக்கொள்கைவகுக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டு இத்தகைய பொதுப்பயன்பாட்டுக் கட்டடங்கள் பராமரிக்கப்படும்.

கிராமப்பகுதிகள் அனைத்தும் முற்றிலும் தூய்மையாகப்பராமரிக்கப்படும்வகையில், திடமற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டங்கள் நவீனத் தொழில்நுட்பத்துடன், அறிவியல்பூர்வமானமுறையில் செயல்படுத்தப்படும்.

2030-ஆம் ஆண்டுக்குள் 10 கோடி மரக்கன்றுகளை நடவுசெய்து வளர்ப்பதன்மூலம் கிராமங்கள் பசுமையாக்கப்படும். ஆண்டுக்கு 2 கோடி மரக்கன்றுகளைச்சாலையோரம் மற்றும் திறந்தவெளிகளில் நடுவதன் வாயிலாகக் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்கள் மட்டுப்படுத்தப்படும்.

நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள ஊராட்சிகளுக்கான சிறப்புத் திட்டம்: விரைவான நகர்மயமாதல் காரணமாக மாநகராட்சி மற்றும் நகராட்சிகளின் புறநகர் பகுதிகள் விரிவடைந்து வருகின்றன. இதனால், அந்தப் பகுதிகளின் அடிப்படைத் தேவைகளும், உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகளும் அதிகரித்து வருகிறது. கிராம ஊராட்சியாக வகைப்படுத்தப்பட்டிருந்தாலும், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள இப்பகுதிகளில் விரைவான சிறப்பு நடவடிக்கைகள்மூலம், நகரங்களுக்குஇணையானவசதிகள், இந்த நகர்ப்புற ஊராட்சிகளுக்கு (Peri-Urban Panchayats) ஏற்படுத்தித்தரப்படும். குறிப்பாகச்சாலைகள், தெருவிளக்குகள், போதுமான அளவு திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை, குடிநீர் ஆதாரங்கள், பசுமை வளாகங்கள், வாகன நிறுத்துமிடங்கள், வெள்ளப்பெருக்கு ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் முறையான மழைநீர் வடிகால் அமைப்புகள் போன்றவசதிகளைநகர்ப்புறஊராட்சிகளும்பெற்றிருப்பது உறுதிசெய்யப்படும்.

### 42. நகர்ப்புற முன்னேற்றம்

தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக இருப்பதற்கு சாலைகள், மேம்பாலங்கள், குடிநீர் வசதிகள், கழிவுநீர் வாய்க்கால் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தான்மிகமுக்கியமானகாரணம். கலைஞர்நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டமும், ரூ.11,100 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட 86 புதிய குடிநீர்த் திட்டங்களும் மக்களுக்கு மனநிறைவைத் தந்துள்ளன. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

**"உட்கட்டமைப்பில்உலகளவில்உயரும்நம்நகரங்கள்" என்ற நோக்கத்துடன் செயல்படுவோம்.**

**மாநகராட்சிப் பகுதிகளில் "Complete Streets" அதாவது நடைபாதை, நிழல் தரும் மரங்கள் என எழில் மிகுந்த சாலைகள் நகரங்களில் உருவாக்கப்படும்.**

**வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் நகர்ப்புறங்களில்அமைந்துள்ளஅனைத்துவீடுகளுக்கும் குடிநீர்க் குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டு தினந்தோறும் குடிநீர் வழங்குவது உறுதிசெய்யப்படும்.**

2030-ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின்நகர்ப்பகுதியில், 20 விழுக்காடு பசுமைப் பகுதிகள், பூங்காக்கள் அமைத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கழிவுநீர் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, 30 விழுக்காடு மறுசுழற்சி செய்யப்படும்.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் மற்றும்அனைத்துப்பெரியமாநகராட்சிகளிலும்நவீன பண்பாட்டு அரங்கங்கள் அமைக்கப்படும்.

Bio-CNG ஆலைகள், கோயம்புத்தூர், மதுரை, தாம்பரம், ஈரோடு, சேலம், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சாவூர் ஆகிய மாநகராட்சிகளில் அமைக்கப்படும். சென்னை மாநகராட்சியில்மேலும்மூன்றுBio-CNGஆலைகள் அமைக்கப்படும்.

கழிவுகளில்இருந்துமின்சாரம்உற்பத்திசெய்யும் ஆலைகள் (WastetoEnergyPlants) சென்னை, தாம்பரம் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளில் அமைக்கப்படும்.

அனைத்து மாநகராட்சிகளிலும் நகர்ப்புறக் கழிவுகளைப்பிரித்தெடுக்கMaterialRecoveryFacilities-MRF வசதிகள் அமைக்கப்படும். பிரிக்கப்பட்ட கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படும்.

பொதுக்கழிப்பறைகள்: பொதுமக்களின்வசதிக்காக அனைத்து மாநகராட்சிகள் மற்றும் முதல்தர நகராட்சிகளிலும்பொதுமக்கள்பெருமளவில்வந்து செல்லும் இடங்களில் பொது - தனியார் கூட்டு முயற்சி அடிப்படையில் (PPP) பொதுக்கழிப்பறைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

நகர்ப்புறங்களில் உருவாகும் கழிவுநீர் அனைத்தையும் சேகரிக்கத் தேவையான உட்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இவ்வாறு சேகரிக்கப்படும்கழிவு நீரைச்சுத்திகரிக்கசுத்திகரிப்புநிலையங்கள்அமைக்கப்படும்.

30 MLD திறன் கொண்ட சுத்திகரிப்பு நிலையங்களில், சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம் மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையங்கள்அமைக்கப்படும்.இவைவேளாண்மை மற்றும்தொழில்துறையினரின்தேவைகளுக்குக்கூடுதலாகப்பயன்படுத்தஅனைத்துநடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

மறுசுழற்சியில்முழுவெற்றிகண்டுள்ளஜப்பான் நாட்டின் Kamikatsu நகர மாதிரியை எடுத்துக்காட்டாகக் கொண்டு திடக்கழிவு மேலாண்மை முறை மாற்றியமைக்கப்படும்.

பழையகுப்பைமேடுகளும்Bio-Miningமுறையில் அகற்றப்பட்டு, நகர்ப்புறங்கள் அனைத்தும்குப்பைகளற்ற பகுதிகளாக மாற்றப்படும்.

தமிழ்நாட்டின்நகர்ப்புறங்களில்தேவைப்படும் அனைத்துஇடங்களிலும்அடுத்தஐந்துஆண்டுகளுக்குள் வெள்ளநீர் வடிகால் வசதி ஏற்படுத்தப்படும்.

அனைத்துப் பூங்காக்களிலும் வெள்ளநீரை உறிஞ்சிதக்கவைத்துக்கொள்ளும்கட்டமைப்புகள் உருவாக்கப்படும். நகர்ப்புற நிலங்களில் குறைந்தது 3 விழுக்காடு "Sponge City" உட்கட்டமைப்பாக மாற்றப்படும்.

தமிழ்நாட்டின் நகர்ப்புறத்திலுள்ள முக்கிய சாலைகள் கான்கிரீட் சாலைகளாக மாற்றப்படும். இதன்படி அமைக்கப்படும் சாலைகள் அனைத்துப் பருவத்திற்கும் ஏற்றதாகவும், நீண்ட காலம் பயன்தரத்தக்கதாகவும் அமையும்.

தமிழ்நாடு முழுவதும் அனைத்துமாநகராட்சிகள் மற்றும் முக்கிய நகராட்சிகளில் 50 புதிய செம்மொழிப் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

நகர்ப்புறங்களில் உள்ள சாலை விளக்குகள் அனைத்தும் smart LED விளக்குகளாக மாற்றப்படும்.

விளையாட்டுத் திடல்கள் இல்லாத பகுதிகளில் புதிய திடல்கள் உருவாக்கப்படும்.

மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் புதிய மின் மயானங்கள் அமைக்கப்படும். அவற்றைசுற்றுப்புற கிராமத்தினரும் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்படும்.

மாநிலத்தில் பரவலாக ஏற்பட்டுவரும் நகர்ப்புற வளர்ச்சியின் காரணமாக வீடுகளுக்கான தேவைகள், தொழில்வணிகநிறுவனங்களுக்கானஇடவசதி, பொது இடங்களின் தேவை ஆகியவை பெருகிவருகிறது. இவற்றுக்கானஇத்தேவையைநிறைவுசெய்ய நாட்டின் முக்கிய நகரங்களில் உள்ள FSI உள்ளிட்ட கட்டடக் கொள்கைகளை ஒப்பிட்டு உரிய புதிய விதிமுறைகள் உருவாக்கப்படும்.

திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய பெரிய மாநகராட்சிகளில் மக்கள்தொகை அதிகரிப்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளும் வேகமாக வளர்ந்து வரும் சூழல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இம்மாநகராட்சிப் பகுதிகளின் அருகாமையில், நவீன உலகத்தரமான வசதிகளுடன் புதிய நகரங்கள் (Global Cities) உருவாக்கப்படும்.

### 43. நெடுஞ்சாலைகள்

ஒரு மாநிலத்தின் உட்கட்டமைப்பின் சாலைகளே அழகு! மக்களின் பயணங்களை எளிதாக்குவதும் - இனிமையாக்குவதும் சாலைகளே!

கடந்த ஐந்தாண்டு காலத்தில் நெஞ்சாலைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறைஆகியவற்றின்சார்பில், 44ஆயிரத்து219கிலோ மீட்டர் தூரத்துக்குச் சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதோடு, 8,730கோடிரூபாய்மதிப்பீட்டில் 1815 பாலங்கள் கட்டப்பட்டு உள்ளன. இவை அனைத்தும் மாநிலத்தின் வளர்ச்சியை எதிரொலிக்கின்றன. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்,

நவீனச் சாலைத் தொழில்நுட்பம், A.I. கண்காணிப்பு, Intelligent Transport Systems ஆகியவற்றால் நம் பாலங்கள், சாலைகளின் தரம் மேம்படுத்தப்படும். விபத்துகள் குறைக்கப்படும்.

புகழ்பெற்ற வழிபாட்டுத் தலங்களுக்கும், சுற்றுலாத்தலங்களுக்கும்செல்லும்சாலைகள்மேம்படுத்தப்பட்டு, உலகச் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் தரத்தில் அமைக்கப்படும்.

நகர்ப்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், சாலைகள் அகலப்படுத்தப்பட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். தேவைப்படும் நகர்ப்புறப் பகுதிகளில் சுற்றுச்சாலைகளும், பை-பாஸ்சாலைகளும் அமைக்கப்படும்.

சாலைகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானத்தைமேம்படுத்தி, சாலைவிபத்துகளால்ஏற்படும் உயிரிழப்புகளைக் குறைப்பதுடன், பாதுகாப்பான சாலைப்பயணம் உறுதி செய்யப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நெடுஞ்சாலைகளில் பயணிப்பவர்கள் மற்றும் கனரக வாகன ஓட்டுநர்களின் பயன்பாட்டிற்காகச் சாலையின் இருபக்கங்களிலும் எரிபொருள் நிலையங்கள், மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் நிலையங்கள், உணவகங்கள், கழிப்பறைகள், வாகன நிறுத்துமிடங்கள், ஏ.டி.எம்.கள் போன்ற வழியோர வசதிகள் (Wayside Amenities) ஏற்படுத்தித் தரப்படும்.

மூன்று புதிய Multi-Modal Logistics Parks உருவாக்கப்படும்: சாலை, இரயில், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து மையங்களை (Multimodal Transportation Network) ஒருங்கிணைத்து தமிழ்நாட்டைத் தெற்காசியாவிலேயே முதன்மையான சரக்கு மேலாண்மை (Logistics) மையமாக 2030-க்குள் நிலைநிறுத்துவோம்.

பின்தங்கிய பகுதிகளிலும் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், முக்கியத் தொழில் பகுதிகளை இணைக்கும் வகையில், தொழில்துறை வழித்தடங்கள் (IndustrialCorridors) ஏற்படுத்தப்படும்.

### 44. போக்குவரத்து

மக்களுக்கு மிகமிக அவசியமான, அன்றாடம் தேவையான ஒரு அரசின் சேவையாகப் போக்குவரத்து அமைந்துள்ளது. திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இட்ட முதல்கையெழுத்து பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் ஆகும். இதுவரை 898 கோடி பயணங்களைப் பெண்கள் மேற்கொண்டுள்ளார்கள். பெண்களின் சமூகப் பங்களிப்பை இது அதிகரித்துள்ளது. மாதம்தோறும் 1200 வரை சேமிக்கிறார்கள். இந்தியாவில் பல மாநிலங்கள் இத்திட்டத்தை பின்பற்றத் தொடங்கி உள்ளது. 8,836 புதிய பேருந்துகள் ஐந்தாண்டு காலத்தில் புதிதாக வாங்கப்பட்டுள்ளன. 3,673 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தாழ்தளப் பேருந்துகளும் மின் பேருந்துகளும் அதிகம் வாங்கப்பட்டுள்ளன. சென்னைக்கு மெட்ரோ ரயில் சேவையைக் கொண்டு வந்ததும் கழக அரசே. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயிலுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும் கழக அரசே. மேலும், கோவை, மதுரை நகரங்களிலும் மெட்ரோ சேவைக்காகவாதாடியும்போராடியும் வருகிறது கழகம். பேருந்துகள், ரயில்கள், விமானங்கள், துறைமுகங்கள் ஆகிய அனைத்து சேவைகளையும்ஒருசேரவளர்த்துள்ளதுநமதுஅரசு. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

திராவிட மாடல் அரசின் 'விடியல் பயணம்' திட்டம், தமிழ்நாட்டுபெண்களின்சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் மேலும் புதிதாக நவீன வசதிகளைக் கொண்ட 10,000 புதிய பேருந்துகளைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவோம்.

பேருந்துப் போக்குவரத்தால் அதிக நெரிசல் ஏற்படக்கூடிய மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையங்கள்/முனையங்கள் (Integrated Bus Terminus) அமைக்கப்படும்.

நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள முக்கிய பேருந்து நிறுத்துமிடங்கள் அனைத்திலும் பயணிகள் அமரும் வசதிகளுடன் கூடிய தரமான பேருந்து நிழற்குடைகள் (Bus Shelters) அமைக்கப்படும்.

குறுகிய அணுகு சாலைகள் கொண்ட கடைக்கோடிப் பகுதிகளில் வசிக்கும் அனைத்து மக்களும் பயனடையும் வகையில் சிற்றுந்து வசதிகள் விரிவுபடுத்தப்படும்.

சென்னைமற்றும்புறநகர்பகுதிகளில்மெட்ரோ மற்றும்மின்சாரரயில்வழித்தடங்களைஒட்டியுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும் ரயில் சேவைகளைப் பயன்படுத்திடும் வகையில் குறுகலான சாலைகளிலும்சிற்றுந்துப்போக்குவரத்துஅறிமுகப்படுத்தப்படும்.

**இரயில்வே:**

திண்டிவனம் - திருவண்ணாமலை புதிய அகலப் பாதைத் திட்டம்,

மொரப்பூர் - தருமபுரி புதிய அகலப்பாதை,

மதுரை - தூத்துக்குடி (அருப்புக்கோட்டை வழியாக) புதிய அகலப்பாதை ஆகிய திட்டங்களை அறிவித்துவிட்டு பல ஆண்டுகளாக நிதி ஒதுக்காமல் இரயில்வேதுறை கிடப்பில் போட்டுள்ளது. இந்தத் திட்டங்களை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

பின்வரும் ரயில்வே திட்டங்களை நிறைவேற்ற ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்.

விழுப்புரம் - பண்ருட்டி - கடலூர் - சீர்காழி - மயிலாடுதுறை - கும்பகோணம் - தஞ்சாவூர் - (Doubling) விரிவாக்கம் செய்யப்பட்ட வேண்டும்.

தாம்பரம் - செங்கல்பட்டு (4-ஆவது பாதை) விரிவாக்கப்பட வேண்டும்.

**புதிய இரயில்வே திட்டங்கள்:**

திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி புதிய அகலப்பாதை,

பரந்தூரில் அமையவுள்ள புதிய விமான நிலையத்தை இணைக்கக்கூடிய செங்கல்பட்டு - அரக்கோணம் (காஞ்சிபுரம் வழியாக) அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல்.

எண்ணூர்/மீஞ்சூர் - சிங்கப்பெருமாள்கோவில் (சென்னை சுற்றுவட்ட புறவழிச்சாலையை ஒட்டி) புதிய அகலப்பாதை

கோயமுத்தூர் - கரூர் (பல்லடம் வழியாக)

கோயமுத்தூர் - அன்னூர் - கோபிசெட்டிபாளையம் - சேலம்

தூத்துக்குடி - திருநெல்வேலி (நேரடியாக)

அரியலூர் - தஞ்சாவூர்

கும்பகோணம் - அரியலூர்/ஜெயங்கொண்டம் - விருத்தாச்சலம்

ஈரோடு - பழனி

MRTS ரயில் சேவையைத் தமிழ்நாடு அரசிடம்




ஒப்படைத்தால், மெட்ரோ ரயிலுக்கு இணையான சேவையை மாநில அரசே வழங்கும்.

கோவைமற்றும்மதுரை ஆகிய பெருநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்த அனுமதிக்குமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துவோம்.

**விமானப் போக்குவரத்து**

தொழில்துறைவளர்ச்சிக்குப்பெரும்பங்களித்து வரும் ஓசூர் பகுதியில் புதிய விமான நிலையம் அமைப்பதற்குத் தமிழ்நாடு அரசு எடுக்கும் முயற்சிக்கு ஒன்றிய அரசு தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருகிறது. இந்த முக்கியத் திட்டத்திற்கு உடனடியாக அனுமதி அளிக்க ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

கோவை விமான நிலைய விரிவாக்கத்திற்குத் தேவையான நிலம் எடுப்பு உள்ளிட்ட அனைத்தும் மாநில அரசால் முடித்துக் கொடுத்த பின்னரும் ஒன்றிய அரசால் பணி தொடங்கப்படாமல் உள்ளது. உடனடியாக இப்பணிகளைத் தொடங்க தொடர்ந்து வலியுறுத்துவோம்.

தென்தமிழ்நாட்டின் தொழில் தலைநகரமாக தூத்துக்குடி வளர்ந்து வருகிறது. இதற்கு அங்குள்ள துறைமுகம், இரயில், விமானப் போக்குவரத்தின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். நவீன வசதிகளுடன்கூடியவிமானநிலையமாகவிரிவாக்கம்செய்யப்பட்டுள்ளநிலையில், தூத்துக்குடி விமான நிலையத்தில் சரக்கு விமானப் போக்குவரத்து முனையம் (Cargo Terminal) அமைக்க ஒன்றிய அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**துறைமுகங்கள்**

துறைமுகம் சார்ந்த பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்வகையில், 3புதியசிறுதுறைமுகங்கள் (Minor Ports) அமைக்கப்படும்.

துறைமுகங்களில்உட்கட்டமைப்புவசதிகள்உருவாக்கப்படும். துறைமுகங்களின் இணைப்புகளும் மேம்படுத்தப்படும்.

நாகப்பட்டினம்மற்றும்கடலூர்துறைமுகங்கள் உலகத்தரத்தில் மேம்படுத்தப்படும்.

### 45. வீட்டுவசதி

அனைவருக்கும் வீடு என்பதை இலக்காக வைத்துச் செயல்பட்டு வருகிறது திராவிட மாடல் அரசு. கலைஞரின் கனவு இல்லம் திட்டம் கிராமப்புற மக்களின்வீட்டுக்கனவை நனவாக்கியது. அடுக்குமாடி குடியிருப்புத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றின் சார்பில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஐந்தாண்டு காலத்தில் 8,66,722 குடும்பங்களின் சொந்த வீடு கட்டும் கனவை நனவாக்கி உள்ளோம். இலங்கைத்தமிழர்களுக்கு 10ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. 7,674 வீடுகள் பழங்குடியினருக்கு கட்டி வழங்கப்பட்டுள்ளன. 1,14,470 கிராமப்புற வீடுகள் முழுமையாக புதுப்பித்துத் தரப்பட்டு உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் 23.56 லட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. வீடுகள் கட்ட திட்ட அனுமதி முறை எளிமையாக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் 5 இலட்சம் புதிய வீடுகள் கட்டித்தரப்படும். கலைஞர்கனவுஇல்லம்திட்டம், நகர்ப்புற வீட்டுவசதிதிட்டம், இலங்கைத்தமிழர்களுக்கான வீடுகள், மிகவும்பழுதடைந்தவீடுகளுக்குபுதியவீடு கட்டும் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களின்கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மொத்தம் 10 லட்சம் புதிய வீடுகள் கட்டித் தரப்படும்.

கலைஞர்கனவுஇல்லம்திட்டம் தேவைக்கேற்ப பேரூராட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

### 46. நிருவாகத்தில் எளிமை

ஒற்றைச் சாளரத்தின் (Single Window) வழியே அனைத்துச் சேவைகளும் வழங்கப்படும். இருந்த இடத்தில் இருந்தபடியே, இணையத்தில் ஒரு சாளரத்தைத் திறந்து, தங்களுக்குத் தேவையான சேவையைச் சுட்டிச் சொடுக்கினால், அதற்கான தகவல்களுடன் விண்ணப்பப் படிவமும் வழங்கப்படும். அதனைநிரப்பிப்பதிவேற்றம்செய்தால், விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான சான்று அப்போதே அளிக்கப்பட்டு, விரைவில், கோரிய சேவையும் நிறைவேற்றப்படும். கணினித் தொழில்நுட்பத்தின் மூலம் அரசு சேவை வழங்குவதை, இத்தகைய நடைமுறைமூலம்எளிமையாக்க உறுதியளிக்கிறோம். இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

அரசு விதிமுறைகள், சான்றுகள் ஆகியவற்றில் எவை தற்காலத்தில் தேவையற்றவை என்று ஆய்வு செய்து, அவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு வழங்க வேண்டிய சேவைகளில் மக்கள் சந்திக்கும்குறைபாடுகளை, கோரிக்கைமனுவின்நிலை ஆகியவற்றை ஒரே சாளரத்தின் (Single Window) வழியே எடுத்துக் கூறித் தீர்வுபெறும் நடைமுறை உருவாக்கப்படும்.

பொதுமக்களுக்குஅரசிடமிருந்துதேவைப்படும் சேவைகளை எளிமையாகப் பெறும் வகையில் ஒரு பெரும்செயலி (SuperApp) உருவாக்கப்படும். அனைத்துச்சேவைகளும்உங்கள்விரல்நுனியில்என்றகனவு இதன் மூலம் மெய்ப்படும்.

பொதுமக்கள்மற்றும்தொழில்நிறுவனங்களுக்கு அரசுத்துறைகளிலிருந்து தேவைப்படும் பல்வேறு சேவைகளைஎளிமையாக்கிடும்வகையில்1000அரசு சேவைகளின் நடைமுறை மாற்றியமைக்கப்படும். சான்றிதழ்கள், தடையில்லாச் சான்று உள்ளிட்ட அனைத்தும் இவற்றுள் அடங்கும்.

சான்றிதழ்களை இணையதளத்திலேயே (Online Certification) பெற்றுக் கொள்ளும் வகையில் அரசின் இணைய சேவை மேம்படுத்தப்படும்.

மக்களுக்கான அரசுத் திட்டங்களின் செயல்பாடுகளைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளத் தேவையான தகவல்கள் அனைத்தும், தொடர்புடைய அலுவலகங்களில் மின்னணு தகவல் பலகைகள் வாயிலாக அறியும் வசதி உருவாக்கப்படும்.

அரசுத்துறைகளில்ஒவ்வொரு முறையும்சான்றிதழ் கேட்டுப்பெறும் முறை தவிர்க்கப்படும். பெறப்படும் சான்றிதழ்கள் ஒரு தொகுப்பாக DigiLocker போன்ற அமைப்பின் உதவியுடன் சேமிக்கப்பட்டு பாதுகாக்கப்படும். உரியவரோ, அல்லது அவரது அனுமதியுடன்தேவைப்படும்அரசுத்துறையோஅதனைப்பெறும்வசதிஉருவாக்கப்படும். இதன்மூலம் நேரமும், மனித உழைப்பும் வீணடிக்கப்படுவது தவிர்க்கப்படும்.

அரசின் சேவைகளைப் பெறுவதற்கு பொதுமக்கள் அதிகம் அணுகக் கூடிய அலுவலகங்களில் வெளிப்படைத்தன்மையும், சேவைகள்விரைவாகக் கிடைப்பதும் உறுதிசெய்யப்படும். கிராம நிர்வாக அலுவலகம்முதல்தலைமைச்செயலகம்வரைஉள்ள அனைத்து அரசுஅலுவலகங்களிலும் 100விழுக்காடு மின்னணு அலுவலக நடைமுறை செயல்படுத்தப்படும்.

அரசுத்துறைமட்டுமேதரச்சான்றளிக்கும்முறை மாற்றியமைக்கப்பட்டு, நிபுணத்துவம்வாய்ந்தநபர்களைக் கொண்ட மூன்றாம் தரப்பு ஆய்வு செய்து சான்றளிக்கும் முறை அரசுத்துறைகளில் படிப்படியாக அறிமுகம் செய்யப்படும்.

விதிமுறைகளை ஏற்று விண்ணப்பதாரர்கள் வழங்கும் சான்றிதழ்களை (Compliance Certificate) அரசுத்துறை அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து ஏற்கும் முறை எல்லா சூழ்நிலைகளிலும் தேவையற்றது. பொதுமக்களே தாங்கள் விதிமுறைகளை ஏற்று இணங்கி நடப்பதாக வழங்கிடும் சுயசான்றுகளை (Self Certification) ஏற்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். தேவைப்படும்போதுமட்டுமே அரசுகள் ஆய்வு மேற்கொள்ளும். இவ்வகையில் நம்பிக்கை சார்ந்த ஆளுமை முறை மாநில நிர்வாகத்தில் வளர்த்தெடுக்கப்படும் என்று உறுதியளிக்கிறோம்.

பொதுமக்களுக்குஇன்றியமையாதசேவைகளை வழங்கும்அரசுத்துறைகளானபத்திரப்பதிவுத்துறை, போக்குவரத்துத் துறை போன்ற துறைகள் அனைத்தும் நவீனத் தொழில்நுட்பத்துடன் முற்றிலும் மாற்றியமைக்கப்படும். பொதுமக்கள், தங்களுக்குத் தேவைப்படும் சேவையைப் பெறுவது எளிமையாகவும்காலவிரயமின்றியும்நடந்தேற இம்முயற்சிகள் உதவும்.

### 47.பொது விநியோகம்

திராவிட மாடல் ஆட்சியும் ஏழை எளிய பொது மக்களின் வசதிக்காக அவர்களுடைய குடியிருப்புகளுக்கு அருகிலேயே நியாய விலைக் கடைகள் அமைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாகஇருந்தது. 633 முழுநேரநியாயவிலைக்கடைகளும், 1,033 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் என மொத்தம் 1,666 நியாய விலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. 2,778 நியாய விலைக் கடைகள்மேம்படுத்தப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளை அதிகரிப்பதுதான் ஒரு ஆட்சி மக்கள் மீதுவைக்கும்உண்மையானஅக்கறையாகும். இதன் தொடர்ச்சியாக திராவிட மாடல் 2.0 ஆட்சியில்...

ஆண்டுதோறும், புதிய குடும்ப அட்டைகள் முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வழங்கப்படும்.

10,000 நியாயவிலைக்கடைகள்பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளுடன் புதுப்பிக்கப்படும்; தேவைப்படும் இடங்களில் புதிய நியாயவிலைக் கடைகள் அமைக்கப்படும்.

### 48 .நிதி மேலாண்மை

ஆட்சிப்பொறுப்புக்குவந்தஉடனேயேஇரண்டு முக்கியமான தடைகள் தமக்கு உள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்கள். முந்தைய பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டை அனைத்துவகையிலும்சீரழித்தஅ.தி.மு.க. ஆட்சி என்பது ஒன்று. தமிழ்நாட்டின் வளர்ச்சியை

தொடர்ச்சி 12–ஆம் பக்கம்